பள்ளித் தலைமையின் தேசிய மையம்

# பள்ளித் தலைமைப் பண்பு மேம்பாடு







# தேசிய திட்ட வடிவமைப்பு மற்றும் பாடத்திட்ட வடிவமைப்பு

National Institute of Educational Planning and Administration

# TEAM MEMBERS


Rashmi Diwan

Sunita Chugh

Kashyapi Awasthi

Subitha G.V.

N. Mythili

Seema Singh

Shreya Tiwari

G  S Negi

Charu Smita Malik

Darakshan Parween

Monika Bajaj

NATIONAL CENTRE FOR SCHOOL LEADERSHIP
NCSL
Every Child Learns
Every School Excels

பள்ளித் தலைமையின் தேசிய மையம்

## பள்ளித் தலைமைப் பண்பை மேம்படுத்துதல்

# தேசிய திட்ட வடிவமைப்பு
# மற்றும்
# பாடத்திட்ட வடிவமைப்பு

National Institute of Educational Planning and Administration

National Institute of Educational Planning and Administration (NIEPA)
(Deemed to be University)

© **NIEPA**

First Published in English : February 2014

Tamil Transltion : September 2018

Published by the Registrar, National Institute of Educational Planning and Administration (NIEPA), 17-B, Sri Aurobindo Marg, New Delhi - 110016 and Layout by Bachan Singh.

# முன்னுரை

இந்தியாவில், பள்ளி கல்வி, முன் எப்போதும் இல்லாத அளவிற்கு, சமீப காலத்தில், மிகப்பெரிய அளவில் விரிவடைந்துள்ளது. தொடக்கக் கல்வி அனைவருக்கும் சென்றடையும் விதத்தில் பொதுவாக்கப்பட்டுள்ளது. நடுநிலைப் பள்ளிகளின் எண்ணிக்கையும் அதிகமாயிருக்கிறது. இதுவும் அனைவருக்கும் சென்றடையும் விதத்தில், நாட்டின் பல்வேறு இடங்களில், வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. குழந்தைகளின் பங்களிப்பில், இந்த எண்ணிக்கையில் முன்னேற்றம், முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தி இருப்பினும், தரத்தை பற்றிய கவலை இருந்து கொண்டே இருக்கிறது. பெரிய அளவு முறைதிறன் மூலம் மட்டுமே, தரத்தை கொண்டு வரமுடியாது என்ற கருத்து வெகுவாக பரவிக் கொண்டு வருகிறது. இது, அமைப்பு நிலை சீர்திருத்தத்திலிருந்து, பள்ளி நிலையில் செயல்பாட்டிற்கு, மாற்றப்படுவதை கோருகிறது. 1.5 கோடி பள்ளிகள் இருக்கும் இடத்தில், ஒரு மையத்திலிருந்து செயலாக்க முற்படுவது, சுலபமான காரியம் அல்ல. சுற்று வட்டாரத்தில் இருக்கும் நபர்களின் நேரடித் தொடர்பு மூலம், ஒவ்வொரு பள்ளியையும் வளமான கற்கும் அமைப்பாக உருமாற்றப்படுவதை வேண்டுகிறது உண்மையாகவே, இதுதான், இந்த ஆவணத்தில் கொடுக்கப்பட்டிருக்கும், பள்ளித் தலைமை முன்னேற்றத்திறகான தேசிய திட்டத்தின் நோக்கமாகும். இந்த திட்டத்தில், தலைமை ஆசிரியரின் பங்கானது, சந்தேகமேயில்லாமல், முக்கிய இடத்தை வகிக்கிறது.

இந்த ஆவணத்தில் கூறப்பட்டிருக்கும், திட்ட வடிவமைப்பு மற்றும் பாடத்திட்ட வடிவமைப்பு, ஒவ்வொரு பள்ளியின் மாற்றத்திற்கும், முன்னேற்றத்திற்குமான உருமாற்ற குறிப்புகளின் (Agenda) அடிப்படை தத்துவத்தை தெளிவாகக் கூறுகிறது. ஆராய்ச்சி மற்றும் நிறுவன வலைபின்னலுடன், தலைமை முன்னேற்றத்திற்கான கிரகிக்கும் திறன் வளர்க்கும் திட்டங்கள், ஒன்றுக்கொன்று இணைந்து செயல்பட வேண்டிய தேவையை உணர்த்துகிறது. பள்ளி அமைப்பில், தலைமையின் கிரகிக்கும் திறனை வளர்க்க தேவையான பொருளடக்கம் மற்றும் செயல்முறையை தெளிவாக விவரிக்கிறது. பாடத்திட்டம், தன் அனைத்து செயல்பாடுகளிலும், கற்பவர், கற்றல் மற்றும் கற்பித்தல் இவற்றில் கவனம் செலுத்துகிறது. தேசிய மற்றும் மாநில அளவில் இருக்கும் தனிச்சிறப்புப் பெற்றவர்கள் மற்றும் களப்பணியாளர்களுடனான

தொடர் ஆலோசனையின் அடிப்படையில் தான் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இது பள்ளியின் தரத்தை மட்டுமல்லாது, பல்வேறு வித்தியாசமான சூழலில் பணியாற்றும் பள்ளிகளிடையே சமத்துவத்தின் தேவையையும் உறுதி செய்கிறது. எந்த ஒரு ஆவணமும், மாற்றம் செய்யப்படக்கூடியதாகவும், பள்ளி அமைப்பின் மாறக்கூடிய வேண்டுக்கோளுக்கேற்ப மறுமொழி சொல்லக்கூடியதாக இருத்தல் மிக அவசியம். இது, NCSL, இந்த பாடத்திட்டத்தை, நாடு முழுவதும் செயல்படுத்த விழையும்பொழுது, வழிநடத்த உதவியாக இருக்கும்.
இந்த ஆவணத்தை தயார் செய்தமைக்கு, நான் NCSL—ஐ வாழ்த்துகிறேன். மாநில அரசு அதிகாரிகள், பள்ளித் தலைவர்கள் மற்றும் பள்ளித் தலைமை முன்னேற்றத்தில் ஈடுபட்டிருக்கும் அனைவரும், இதனால் பயன்பெறுவார்கள் என்று நம்புகிறேன்.

புதுடெல்லி
பிப்ரவரி, 2014

R. Govinda
Vice-Chancellor

# நன்றியுரை

பள்ளி உருமாற்றத்திற்காக, பள்ளித் தலைவர்களுக்கு, அறிவு, திறன் மற்றும் மனப்பான்மையில் ஆற்றலளிக்க, NIEPA-இன் அங்கமாக பள்ளித் தலைமைக்கான தேசிய மையம் உருவாக்கப்பட்டுள்ளது. பள்ளித் தலைமை முன்னேற்றத்தில் கவனம் செலுத்தக்கூடிய திட்ட வடிவமைப்பு மற்றும் பாடத்திட்ட வடிவமைப்பு உருவாக்குவதில் NCSL கவனம் செலுத்துகிறது.

மையத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் ஊக்குவித்து திறம்பட செயல்பட வைத்த, மனிதவள மேம்பாட்டுத் துறைக்கு எங்களது நன்றி கலந்த வணக்கம்.

தேசிய அளவிலிருந்து மாநில அளவு வரை, வெவ்வேறு நிலைகளிலும் நடந்த கலந்துரையாடல்கள், கூட்டங்கள் மற்றும் ஆலோசனைகளின் முடிவுதான் இந்த ஆவணம். இது, பள்ளித் தலைமைக்கான தேசிய மையம், தேசிய வள குழு, மாநில அரசுகள் மற்றும் மாநில வள குழுக்கள் – இவற்றிற்குள் ஒரு இணக்கத்தை உருவாக்குகிறது. ஒவ்வொரு உறுப்பினருக்கும் முன்னேற்றத்தின் ஒவ்வொரு நிலையிலும், அவர்களின் உதவி, வழிகாட்டல் மற்றும் ஊக்கத்திற்கு எங்கள் மனமார்ந்த நன்றி.

எங்கள் அறிவுரையாளர்களான திரு ஆதித்யா நடராஜ், திரு. சுனில் பத்ரா மற்றும் திரு. சசி மெண்டிரிட்டா அவர்களுக்கு எங்களின் சிறப்பு நன்றி.

கற்பித்தல் மற்றும் தலைமைக்கான தேசிய கல்லூரி – (National College of Teaching and Leadership – NCTL, UK)–யின் அறிவுரையாளர்களோடு, மையம் நெருக்கமான தொடர்பு கொண்டு செயல்பட்டது. முக்கியமாக முனைவர் ராபின் அட் ஃபீல்ட் மற்றும் முனைவர் ரேஷ்மி சின்ஹா, நிர்வாக மற்றும் செயலாளர் ஆகியோர் உதவிகளை தந்தமைக்கும், திரு. பட்நகர், திரு. அவகா தேகி மற்றும் திரு. குர்மீட் சாரங் அவர்களுக்கும் நன்றி.

NIEPA-வை சேர்ந்த பதிப்புக் குழு, முக்கியமாக திரு. சோம்நாத் சேகர், திரு. பிரமோத் ராவத் மற்றும் அமித் சின்ஹல் ஆகியோருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

# பொருளடக்கம்


முன்னுரை III

நன்றியுரை V

1. **அறிமுகம்** 1
   பள்ளித் தலைமைக்கான தேசிய மையம் 2

2. **பள்ளித் தலைமைக்கான தேசிய மையம்** 4
   தேசிய அளவில் 4
   மாநில அளவில் 5

3. **பள்ளித் தலைமை திட்டத்திற்கான வழிமுறை** 6
   பகுதி 1 : பாடத்திட்டம் மற்றும் வள முன்னேற்றம் 6
   பகுதி 2 : திறன் கட்டமைப்பு 7
   பகுதி 3 : வலைபின்னல் மற்றும் நிறுவனங்களை உருவாக்குதல் 9
   பகுதி 4 : ஆராய்ச்சியும், முன்னேற்றமும் 10

4. **பள்ளித் தலைமை முன்னேற்றத்திற்கான பாடத்திட்ட வடிவமைப்பு** 11
   முதன்மையான நோக்கம் 12
   வழிகாட்டும் கொள்கைகள் 12
   பாடத்திட்டத்தை செயல்படுத்துதல் 12

5. **முக்கிய பகுதிகள்** 13
   பகுதி 1 : பள்ளித் தலைமையின் தோற்றம் 15
   பகுதி 2 : சுய முன்னேற்றம் 16
   பகுதி 3 : கற்பித்தல்–கற்றல் முறையை உருமாற்றுதல் 17
   பகுதி 4 : குழுக்களை உருவாக்கி, வழிநடத்துதல் 19
   பகுதி 5 : புதுமைகளை வழிநடத்துதல் 20
   பகுதி 6 : பங்குதாரர்களின் பங்களிப்பை வழிநடத்துவது 21
   பகுதி 7 : பள்ளி நிர்வாகத்தை வழிநடத்துதல் 22

**சிறப்பு கவனிப்பு பகுதிகள்** 25

**வளங்களை உருவாக்குதல்** 28

# அறிமுகப்படுத்துதல்


பள்ளிகள் தற்போது முன் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு, சமுதாயத்தின் அதிகார எல்லைக்குள் இருக்கிறது. ஆதலால் பள்ளிகள், அறிவுள்ள ஆற்றல் மிக்க சமுதாயத்தின் எதிர்பார்ப்புகளுக்கேற்ப தங்களை மாற்றிக் கொள்வது மிக அவசியமாகிறது. பள்ளிகளின் உருமாற்றம் அவசியம் என்று உணர்தல், மேலானவர்களாகவும், தலைவர்களாகவும் இருக்கும் பள்ளி முதல்வர்கள் மீது மிக அதிக பொறுப்பை வைக்கிறது. இந்திய அமைப்பில், கல்வி பெறும் உரிமையின் அடிப்படையில், முறையான பள்ளித் தலைமையின் முன்னேற்றத்திற்கான தேவை மேலும் முக்கியத்துவம் பெறுகிறது. கல்வி பெறும் உரிமையானது – அனைவருக்கும் கல்வி கற்பதின் சமமான வாய்ப்பு, தரமான கல்வி பெறுவது, மகிழ்ச்சியான கற்கும் சூழல் – ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். மேற்கூறிய அனைத்தும் நிறைவேறுவது பள்ளி உருமாற்றத்தில் ஈடுபடும் நற்பயனளிக்கும் தலைமையை அதிகமாக சார்ந்திருக்கிறது. மிகக் குறைந்த வளங்களும், அதே சமயம் பெற்றோர்களிடமிருந்தும், சமுதாயத்திடமிருந்தும் அதிக எதிர்பார்ப்பை எதிர்நோக்கும், கடுமையான சூழலில் இருக்கும் பள்ளிகளுக்கு, நற்பயனளிக்கும் தலைமை மேலும் அவசியமாகிறது. தற்போது வியாபித்திருக்கும் சூழலில், பள்ளிகளுக்கு கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் மற்றும் பள்ளிகள் சந்திக்கும் சவால்களை கூர்ந்து ஆராய, பள்ளித் தலைவர்கள் அளவிற்கதிகமாக தங்கள் திறனையும் அறிவையும் வளர்த்துக் கொள்வது மிக அவசியமாகிறது. இந்தச் சூழலில், பள்ளிகள் “மேம்பட்ட மையங்கள்”–ஆக உருமாற – பள்ளித் தலைவர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடையே புதுமை காணலை ஊக்குவிக்கக்கூடிய அமைப்புகளையும், செயல்முறைகளையும் உருவாக்குதல் மிக முக்கியமாகிறது.

பள்ளிகள் தனிப்பட இயங்குவதில்லை. உண்மையில், பள்ளிகள் தாங்கள் இருக்கும் சமுதாயத்தின் அரசியல், பொருளாதார, ஆன்மீக மற்றும் கலாச்சார நிலைகளை பிரதிபலிக்கிறது. ஆதலால், பள்ளிகளை, மேம்பட்ட மையங்களாக மாற்றுவதையே நோக்கமாகக் கொண்ட பள்ளித் தலைமை திட்டத்தில் இந்த பரந்த சமுதாய நிலையை புறக்கணிக்க முடியாது. தலைமையின் பங்கு, நிர்வாகம் மற்றும் மேற்பார்வை பொறுப்புகளிலிருந்து, பள்ளி உருமாற்றத்திற்குத் தேவையான (proactive) உயிர்ப்பான செயல்முறைகளுக்கு மாற்றுவதை இந்த திட்டம் கோருகிறது. இந்தப் புரிதலால் தான், பள்ளி மாற்றத்திற்கான முழுமையான செயல்முறைகளை நடத்துபவராக பள்ளித் தலைவர் பார்க்கப்படுகிறார். ஆகையால், உருமாற்றத்திற்கான முதல்படியாக, பள்ளித் தலைவர்களின் கிரகிக்கும் திறனை வளர்ப்பது மிக முக்கியமாகிறது. இது சம்பிரதாய பயிற்சி முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டு, பள்ளிகளின் உண்மையான சவால்களைஎதிர்கொள்ளக்கூடியநீண்டகாலமுன்னேற்றசெயல்முறைகளை

உள்ளடக்கியதாகும். இந்த பாதையில்தான், பள்ளித் தலைமை முன்னேற்றம் (School Leadership Development) தேசம் முழுவதிலும், பள்ளிக் கல்வியின் அனைத்து நிலைகளிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் பள்ளித் தலைவர்களின் கிரகிக்கும் திறனை, நீண்டகால அடிப்படையில் மற்றும் இடைவிடாமலும் இருக்குமாறு உருவாக்கி, மேலும் வளர்ப்பதற்கு இத்திட்டம் வழிவகுக்கிறது.

## பள்ளித் தலைமைக்கான தேசிய மையம்

பள்ளித் தலைமைக்கான தேசிய மையமானது (NCSL), NIEPA சாதாரண பள்ளிகளை, மேன்மையான பள்ளிகளாக மாற்றும் நோக்கத்துடன் நிறுவப்பட்டது. முடிவாக, தலைமை முன்னேற்றத்தின் மூலம், பள்ளி அமைப்பில் முழுமையான வளர்ச்சியைக் கொண்டு வருவதே ஆகும். NCSL-இன் முதன்மையான பணியானது, பள்ளித் தலைவர்களை, பள்ளி உருமாற்றத்திற்காக தயார் செய்வதாகும். இது, நிர்வாகிகள் மற்றும் செயலாற்றுபவர்களை இடைவிடாது தொடர்புபடுத்தி, பள்ளி உருமாற்றத்தை, அனைத்து பங்குதாரர்களையும் ஒருங்கிணைத்து செய்யப்படுவதாகும். நாடு முழுவதிலுமுள்ள பள்ளிக் கல்வியின் இந்த முக்கிய பகுதியை விரிவாக பார்ப்பதே NCSL–இன் விருப்பமாகும்.



பள்ளித் தலைமை முன்னேற்ற திட்டம் மூலம், NCSL நாடு முழுவதிலும் உள்ள வேறுபட்ட பள்ளிகளை கருத்திற்கொண்டு, மாற்றி அமைத்து கொள்ளக்கூடிய திட்ட வடிவமைப்பை விரும்பி செய்கிறது. வெவ்வேறு சந்தர்ப்ப சூழலில் இருக்கும் தொடக்கக் கல்வி பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், பல்வேறு நிர்வாகத்திற்குட்பட்ட பள்ளிகள், வெவ்வேறு இடங்களில் இருக்கும் பள்ளிகள், பல்வேறு அளவில் இருக்கும் பள்ளிகள் – இவை அனைத்தையும் உள்ளே கொண்டு வருவதே திட்டத்தின் நோக்கமாகும். தேசத்தின் ஒவ்வொரு பள்ளியின் உருமாற்றத்திற்கான NCSL–இன் தொலைநோக்குப் பார்வையையும், எடுத்துரைக்கிறது.

## தொலைநோக்குப் பார்வை

**பள்ளியை உருமாற்றம் செய்யவல்ல புதிய தலைமுறையின் தலைவர்களை உருவாக்குவதன் மூலம் ஒவ்வொரு குழந்தையும் கற்கிறது மற்றும் ஒவ்வொரு பள்ளியும் மேம்படுகிறது.**

## திட்டம்


**பள்ளி நிலையிலேயே தலைமையின் கிரகிக்கும் திறனை மேம்படுத்தித் தரமான கல்வித் தரும் நிறுவனத்தை உருவாக்குதல்.**





# செயல்முறைப்படுத்தக்கூடிய திட்ட வடிவமைப்பு

புதிய தலைமுறை தலைவர்களை உருவாக்குவதன் மூலம், தொலைநோக்குப் பார்வையான பள்ளி உருமாற்றத்தை அடைய, NCSL, தேசிய மற்றும் மாநில நிறுவனங்களை பின்னி பிணைத்து ஒன்று சேர்ந்த அனுபவ பாடத்தை பெற திட்டமிடுகிறது. அவை பின்வருமாறு சுருக்கமாக கூறப்படுகிறது.




## தேசிய அளவில்

NIEPA துணைவேந்தர் பேராசிரியர் R. கோவிந்தாவின் தலைமையில் NCSL செயல்படுகிறது. தேசிய பரிந்துரைக் குழு மற்றும் தேசிய வளக் குழுவிலுள்ள தனித்திறமை வாய்ந்தவர்கள் மற்றும் அறிவுரையாளர்களின் ஆலோசனையின்படியும் செயல்படுகிறது. தேசிய அளவிலான, பள்ளித் தலைமை முன்னேற்ற திட்டத்தின் அனைத்து நிலைகளிலும் NIEPA–இல் உள்ள NCSL வேலை செய்கிறது. கற்பித்தல் மற்றும் தலைமைக்கான தேசிய கல்லூரி (NCTL), நாட்டிங்காம், யுனைடட் கிங்டம்–உடன் இணைந்தும் செயல்படுகிறது. மேலும் இது, யுனைட்டடு இராஜ்ஜியத்தில் செயல்படும் கற்பித்தல் மற்றும் தலைமைக்கான தேசிய கல்லூரி (NCTL) போன்ற அனைத்துலக கல்வி நிறுவனங்களின் கூட்டமைப்புகளோடு செயலாற்றி வருகிறது.

## மாநில அளவில்

NCSL-இன் வழிமுறையானது, மையத்தின் செயல்பாடுகள் தேவையின் அடிப்படையில் இருக்குமாறு செய்வது மற்றும் மாநில மற்றும் தேசிய அளவில் அனைத்து பங்குதாரர்களையும் பங்கு கொள்ளச் செய்வதாகும்.

மாநில தலைமைப்பண்பு மேம்பாடு என்பது மாநிலத்தில் உள்ள கல்வி நிலையங்களை வலைதள இணைப்பின் மூலம் செயல்படுத்தப்படும். மாநில பங்களிப்பாளர்கள் தலைமைப் பண்பை மேம்படுத்தும் அணியாக அதாவது மாநில வளக்குழுவாக (SRG) செயல்படுவர். SRG, மாநிலத்தின் தேவைக்கு உகந்த பயிற்சி கட்டமைப்புகள், கருவிகள் மற்றும் இதர தேவைகளை உருவாக்கித் தருவர். இவர்கள் NIEPA–வின் NCSL–உடன் இணைந்து மாநில தலைமைப் பண்பு கற்றல் அகாடமியை (Learning Academy) உருவாக்க உதவியாக இருப்பர். மைய அமைப்பிற்கு இத்தலைமைப் பண்பு கற்றல் அகாடமி (Learning Academy) மற்றும் SRG ஆகிய அமைப்புகள் ஆதரவாகவும் உதவிகரமாகவும் அமையும். இதுபோல உருவாக்கப்பட்ட அமைப்பு மாநில அளவில் தொழில்மய கற்றல் சமுதாயத்தை (PLC) உருவாக்கி NIEPA–வின் NCSL–உடன் இணைந்து பணிமனை கருத்தாய்வு, Modular Courses ஆகியவற்றை வலைதள இணைய வசதியுடன் தொடர் தலைமைப் பண்புப் பயிற்சிகளை நடத்திட உதவி செய்யும்.

# பள்ளித் தலைமை திட்டத்திற்கான வழிமுறை

NCSL-ஆனது, பள்ளித் தலைமை முன்னேற்றம் மூலம், நாட்டிலுள்ள பலதரப்பட்ட பள்ளிகளுக்கேற்ற மாற்றத்தகுந்த திட்டங்களை தொலைநோக்குப் பார்வையுடன் உருவாக்குகிறது. வெவ்வேறு சந்தர்ப்ப சூழலில் இருக்கும் தொடக்கக் கல்வி பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், பல்வேறு நிர்வாகத்திற்குட்பட்ட பள்ளிகள், வெவ்வேறு இடங்களில் இருக்கும் பள்ளிகள், பல்வேறு அளவில் இருக்கும் பள்ளிகள் – இவை அனைத்தையும் உள்ளே கொண்டு வருவதே திட்டத்தின் நோக்கமாகும். தலைமைப் பண்பு மேம்பாட்டுத் திட்டத்தினை NCSL கீழ்வரும் நான்கு செயல்படுத்தவல்ல தலைப்பின்கீழ் உருவாக்கியுள்ளது. அவை – பாடத்திட்டம் மற்றும் வளங்களின் முன்னேற்றம், கிரகிக்கும் திறனை வளர்த்தல், வலைபின்னல் மற்றும் கல்வி நிறுவன முன்னேற்றம் மற்றும் ஆராய்ச்சியும் வளர்ச்சியும் என்பனவாகும்.

மாநில வளக்குழுக்கள் மற்றும் பள்ளித் தலைவர்களின் கிரகிக்கும் திறனை வளர்ப்பதற்கான (Capacity Building) அடித்தளமாக பாடத்திட்டம் வளங்களின் முன்னேற்றம் அமைகிறது. வலைபின்னல் மற்றும் ஆராய்ச்சியானது ஒன்றுக்கொன்று இணையாக செயல்படுகிறது. இதன் மூலம் வளகுழுக்களும், பள்ளித் தலைவர்களும் – தலைமை முன்னேற்றத்தின் செயல்பாட்டை உருவாக்கவும், செயல்படுத்தவும், ஆராயவும் – ஒருங்கிணைக்கப்படுகிறார்கள். பலம் கொண்ட பகுதிகள் ஒன்றையொன்று சார்ந்திருப்பதை கருத்தில் கொண்டு, மையத்தின் திட்டச் செயல்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், பாடத்திட்ட உருவாக்கம், களத்தில் செயல்படுத்துதல், மதிப்பீடு செய்தல் மற்றும் கருத்துக் கேட்டல் இவற்றின் ஒன்றுக்கொன்றுடனான தொடர்பு உறுதிப்படுத்தப்படுகிறது. இது களத்தில் செயல்படுத்துபவர்களின் தேவைக்கேற்ப புதிய அறிவுத்திறனை வளர்க்க, வடிவமைக்க, திட்டமிட, திட்டங்களை உருவாக்க பங்காற்றுகிறது. புதிதாக தோன்றும் தொழில் சார்ந்த பள்ளித் தலைவர்களின் கற்கும் சமூகமும் ஆதரிக்கப்படுகிறது.

## கூறு 1 : பாடத்திட்டம் மற்றும் வளங்களின் முன்னேற்றம்

21ஆம் நூற்றாண்டின் சவால்கள் மற்றும் பள்ளிகளின் தேவைகள் அடிப்படையில், பள்ளித் தலைவர்கள் பங்கின் பரிணாம வளர்ச்சியை பிரதிபலிக்கக்கூடிய விரிவான, மாற்றத்திற்குட்பட்ட பள்ளித் தலைமைக்கான ஆவணம்தான் பாடத்திட்ட வடிவமைப்பு. பள்ளித் தலைமையின் மனஉரு மற்றும் செயல்பாடுகளுடன் தொடர்பு கொண்ட ஆறு முக்கியமான பகுதிகளை சுற்றியே

பாடத்திட்ட வடிவமைப்பு உருவாக்கப்படுகிறது. இந்தியாவில், இந்தத் துறையில் தங்களை தொடர்புபடுத்திக் கொண்டுள்ள தேசிய அளவிலான கல்வியாளர்கள் மற்றும் செயல்முறைப்படுத்துபவர்களின் ஆலோசனைகளை கருத்திற்கொண்டு இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. பள்ளித் தலைவர்களின் அடிப்படை தேவைகள் மற்றும் நிதர்சனங்களை கருத்திற்கொண்டு, எட்டு மாநிலங்களில், மாநில வளங்கள் குழுவால் இந்த ஆவணம் பரிசோதித்து பார்க்கப்பட்டு, எளிதாக்கப்பட்டுள்ளது.

இந்திய பள்ளி அமைப்பின் மிகுந்த வேறுபாடுகளை கருத்திற்கொண்டு, பாடத்திட்ட வடிவமைப்பு வெவ்வேறு மாநிலங்களின் தேவைக்கேற்ப உருவாக்கப்பட்டுள்ளது.

## நோக்கங்கள்

- தற்போதைய மற்றும் வரக்கூடிய காலங்களில் பள்ளித் தலைவர்கள் விரும்பும் தேவையின் அடிப்படையில் சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்ட திட்டங்களையும், பாடத்திட்டத்தையும் உருவாக்குதல்.
- பள்ளித் தலைவர்களுக்கான வளங்களின் களஞ்சியத்தை உருவாக்குவது.
- பல்வேறு பள்ளிகளின் சூழலுக்கேற்ப, கற்றல் வளங்களை உருவாக்கி, அவற்றை வெவ்வேறு சந்தர்ப்பத்திற்கேற்ப பிரத்யேகமாக பயன்படுத்துதல்.

## கூறு 2 : கிரகிக்கும் திறனை வளர்த்தல் (Capacity Building)

கிரகிக்கும் திறன் வளர்த்தல் பகுதி, பள்ளித் தலைவர்களின் தலைமை முன்னேற்றத்தில் பிரத்யேக கவனம் செலுத்துகிறது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, மாநில, மாவட்ட, வட்ட மற்றும் தொகுப்பு நிலையிலுள்ள தலைமை குழுக்களை ஒழுங்குமுறையாக ஈடுபடுத்துவதன் மூலம், அவர்களின் கிரகிக்கும் திறனை வளர்ப்பதில் இந்த பகுதி கவனம் செலுத்துகிறது.

பாடத்திட்ட வடிவமைப்பில் உருவாக்கப்பட்ட முக்கிய பகுதிகளைச் சுற்றியே, பள்ளித் தலைவர்களுக்கான கிரகிக்கும் திறன் வளர்ப்பதற்கான திட்டம் வடிவமைக்கப்படுகிறது. இவை, சுலபமாக, செயல்படுத்தக்கூடிய சூழலில், தேவையின் அடிப்படையில் தயாரித்த திட்டங்கள் மூலம் செயலாக்கப்படுகிறது. செயல்முறை வளங்களின் அடிப்படையில், திட்டங்கள் கொடுக்கப்படுவதில் மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது. இதன் மூலம், அவர்கள் பெற்ற அறிவு மற்றும் திறனை தங்கள் சொந்த அனுபவத்தில் உணர முடியும். நாடு முழுவதிலும், பிரத்யேக இலக்கு மற்றும் பிரச்சினைக்கான தேவைகளின் அடிப்படையில், பலமடங்கு குறுகிய கால மற்றும் நீண்டகால பாடங்கள் மூலம் இந்த திட்டம்

செயலாக்கப்படும். பள்ளி வளர்ச்சிக்கான செயல்பாடுகளை தொடர்ச்சியாக வழிநடத்த, பள்ளித் தலைவர்களின் நிர்வகிக்கும் திறனை வளர்க்க முற்படுகிறது. தலைமை முன்னேற்றத்திற்குத் தேவையான, தேவை அடிப்படை திட்டத்தை உருவாக்கவும், செயலாக்கத்திற்கு கொடுக்கவும் மாநில மற்றும் மாவட்ட நிலை ஆசிரியர்களுக்கு கிரகிக்கும் திறனை வளர்க்கவும் விழைகிறது. இதன் மூலம், தனிப்பட்ட நபர்களை, புதிய சிந்தனைகளின் உயிர்ப்புடன் ஈடுபட வைக்கிறது.

## நோக்கங்கள்

- பள்ளித் தலைவர்கள் தங்களின் பொறுப்புகள், கடமைகள் பற்றிய புரிதலில் ஒரு மாற்றத்தை உருவாக்கி, அவர்களை புதுமை காணவிழையும் புத்தாக்கச் சிந்தனையுடையவர்களாக மாற்றியமைக்க வழிவகுத்தல்.
- தங்கள் மாநிலங்களில், தலைமை முன்னேற்றத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு, தனிச்சிறப்பு வாய்ந்த குழுவை தயாரிப்பது.
- கற்றலை கற்பித்தல், தனிப்பட்ட மற்றும் தொழில் சார்ந்த முன்னேற்றம், பள்ளி செயல்பாட்டில் புதுமை புகுத்துதல் மற்றும் பங்களிப்புகள் போன்ற பகுதிகளில் பள்ளித் தலைவர்களின் கிரகிக்கும் திறனை வளர்த்தல்.
- உள்ளாட்சி அமைப்புத் தலைமைகள், (SMCs, SMDCs, VECs, PTAs) மற்றும் நடைமுறை தலைமை (System Leadership) ஆகிய– இவர்களிடம் பள்ளியின் தரத்தை உயர்த்துவதற்கான பொறுப்பை ஒப்படைத்தல்.

இந்த திட்டங்களைச் செயல்படுத்தும் பணி, NCSL-இன் வழிகாட்டுதல் மற்றும் ஆதரவுடன் மாநிலங்களின் பொறுப்பில் விடப்படுகிறது. செயல்முறை வளங்களின் அடிப்படையில், திட்டங்கள் கொடுக்கப்படுவதில் மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது. இதன் மூலம், அவர்கள் பெற்ற அறிவு மற்றும் திறனை, தங்கள் சொந்த அனுபவத்தில் உணரமுடியும். சூழ்நிலைக்கேற்ப, பாடத்திட்ட வடிவமைப்பு மற்றும் வளங்களை மாற்றிக் கொள்ள வாய்ப்பளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும், தனிச்சிறப்பு வாய்ந்த தலைமை செயல்பாட்டு முறைகள் ஆவணப்படுத்தப்படும். அவை, மாநிலங்கள் தேர்வு செய்யும். மாவட்டங்கள், தொகுப்புகள் மற்றும் பிற இடங்களில் நடத்தப்படும் கிரகிக்கும் திறன் வளர்க்கும் பயிற்சிகளில் விநியோகிக்கப்படும்.

கிரகிக்கும் திறன் வளர்க்கும் திட்டங்கள், பள்ளித் தலைமை முன்னேற்றத்தை பற்றிய பரந்த தோற்றத்தைத் தருகிறது. இதன் மூலம், மாநில வளங்கள் குழு

தேர்ந்தெடுக்கும்நடத்துபவர்கள்மற்றும்பிறதனிச்சிறப்புவாய்ந்தவர்களிடமிருந்து பெறப்படும் கள அறிவுரை யாவும் தலைமைப் பண்பாட்டுப் பயிற்சிக்குக் கள ஆதரவாக அமையும்.

## கூறு 3 : வலைபின்னல் மற்றும் நிறுவனங்களை உருவாக்குதல்

NCSL – ஒவ்வொரு மாநிலத்திற்குள்ளும், நிறுவனங்களின் வலைபின்னல், தொழில்சார்ந்த மற்றும் தனிப்பட்ட தனி சிறப்பு வாய்ந்தவர்கள் உடன் நீண்டகால தொடர்பு வைத்துக் கொள்கிறது. இதனால் நாடு முழுவதிலும், ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான கல்வி நிச்சயிக்கப்படுகிறது. இதற்கு, ஒவ்வொரு பள்ளியும், உருமாற்றக்கூடிய நிகழ்ச்சிநிரலை பின்தொடர்வது அவசியமாகிறது. நிறுவனங்களுக்கு ஒழுங்குமுறையான கிரகிக்கும் திறனை உருவாக்கி, பள்ளித் தலைமை முன்னேற்றத்தை அளிப்பதற்கு, NCSL ஆனது அரசாங்கம் மற்றும் தனியார் தொழில் சார்ந்த நிறுவனங்கள், மாநிலத்தில் பள்ளித் தலைமையில் ஏற்கெனவே ஈடுபட்டிருக்கும் அல்லது ஈடுபடபோகும் நிறுவனங்கள், இவற்றோடு மாநில, மாவட்டம், வட்டம் நிலையிலுள்ள வள நிறுவனங்கள் மற்றும் அதிகார அமைப்புகள் – இவற்றுடன் பங்கு வைத்துக் கொள்கிறது.

ஒவ்வொரு மாநிலத்திலும், மத்திய நிறுவனம், மாநில வள குழு, நங்கூர நிறுவனம் மற்றும் ஒரு மைய நிறுவனம் மூலம் செயல்படுகிறது. மைய நிறுவனம், நங்கூர நிறுவனத்தோடு இணைந்து, மாநில அளவில் தலைமை நிறுவனமாக உருமாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய மையத்தின் ஒரு நீண்ட கையாக மைய நிறுவனம் செயல்படும். மைய நிறுவனம், திட்டத்தின் தேவைக்கேற்பவும், கிடைக்கக்கூடிய பொருத்தமான நிறுவனங்களை சார்ந்தும், நேரடியாகவும், நிறுவனங்களின் வலைபின்னல் மூலமும், மாவட்டம் மற்றும் வட்டம் நிலையில் பணி செய்கிறது. ஒவ்வொரு மாநிலத்திலும், தலைமைப் பண்பு கற்றல் அகாடமி மற்றும் மாநில வளக் குழுக்களை நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### நோக்கங்கள்

- மாநில அரசுகளோடு கலந்தாலோசித்து தலைமைப் பண்பு நிறுவனங்களை (Leadershi academy) நிறுவுவது மற்றும் NCSL மற்றும் தலைமைப் பண்பு நிறுவனங்களுக்குள் இணக்கத்தை கொண்டு வருவது.
- மாவட்டம், வட்டம் மற்றும் தொகுப்பு நிலையிலிருக்கும் பள்ளிகளோடு நெருக்கமாக பணி செய்யும் கீழ்நிலையிலுள்ள (கள) நிர்வாகிகளுக்கும் (CRPs, BRPs, DEOs) பள்ளித் தலைவர்களுக்குமிடையே தொடர்பு ஏற்படுத்துவது. SMC மற்றும் சமூக உறுப்பினர்களோடும் தொடர்பு ஏற்படுத்துவது.

- நாட்டில், நற்பயனளிக்கும் விதத்தில், தலைமை முன்னேற்றத்தை நிறுவ உதவும் கூட்டு கற்றல் அனுபவத்தை உருவாக்க, மாநில, மாவட்டம் மற்றும் சுற்றுப்புற அளவில், தொழில் சார்ந்த கற்றல் சமூகத்தை உருவாக்குவது.

மற்ற அமைப்புகளோடும், மாநில அரசுகளோடும் விவாதிக்கவும், உரையாடல் வைத்துக் கொள்ளவும், தலைமை நிறுவனங்களை நிறுவுவதற்கும் NCSL முன்னணி பங்கு வகிக்கிறது. மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளில் இருக்கும். தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனங்களில், தலைமைப் பண்பு நிறுவனங்கள் நிறுவப்படும். இந்த நிறுவனங்கள், மாநில கல்வித் துறையோடும், மாநில வளக் குழுவோடும், நெருக்கமான தொடர்பு கொண்டு பணி செய்யும். தங்களின் சொந்த உறுப்பினர்கள் அல்லது தொழில் சார்ந்த உரையாடல் மூலம் தொடர்ந்து பள்ளி முன்னேற்றத்தில் ஈடுபடும் அருகாமையில் இருக்கும் தனி சிறப்பு வாய்ந்தவர்கள் / பள்ளித் தலைவர்கள் தொண்டர்கள், ஓய்வு பெற்ற பள்ளித் தலைவர்கள் அல்லது சமூக உறுப்பினர்கள் – இவர்களுடைய உதவியை, தலைமைப் பண்பு நிறுவனம் பெறும். இத்தகைய தொழில் சார்ந்து தொடர்பு கொள்ளும் சமூகங்கள் தங்களுக்குள் வலைபின்னலை ஏற்படுத்தி, தொகுப்பு, வட்டம், மாவட்ட நிலைகளில், தொழில் சார்ந்த கற்றல் சமூகத்தை (PLC) உருவாக்குகிறது. இதன் மூலம், சிறந்த பயிற்சிகள், அனுபவ மற்றும் பரிவர்த்தனை கற்றலை பகிர்ந்து கொள்ள முடியும். காலப்போக்கில், தொழில் சார்ந்த கற்றல் சமூக வலைபின்னலை மாவட்டம், மாநிலம் மற்றும் மண்டலங்கள், கூடவே மத்திய தலைமைப் பண்பு நிறுவனத்தோடும் உண்டாக்குவதும் இதன் திட்டமாகும்

## கூறு 4 : ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றம்

பள்ளி உருமாற்றத்திற்குத் தேவையான ஆழமான புரிதல் மற்றும் பள்ளித் தலைமை பகுதியில் புதிய அறிவுத் திறனை உருவாக்கவும், ஆராய்ச்சியும், முன்னேற்றமும் அவசியமாகிறது. தலைமைப் பண்பு மையம் ஒருங்கிணைந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ள – மற்ற ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட தனிச்சிறப்பு பெற்றவர்களுடன் இணைந்து செயல்படுகிறது.

## நோக்கங்கள்

- சிறந்த தலைமைப் பயிற்சிகளை சேகரித்தல், ஆவணப்படுத்துதல் மற்றும் பரப்புதல்
- இந்திய சூழலுக்கேற்ப, பள்ளித் தலைமை முன்னேற்றத்திற்கு – புதிய அறிவுத்திறனை கொடுப்பது

பள்ளித் தலைமை முன்னேற்ற திட்டம் முழுவதும் பாடத்திட்ட வடிவமைப்பில் வழிகாட்டப்படுகிறது. திட்டத்தை செயல்படுத்த கையேடு உபயோகப்படுத்தப்படுகிறது. பாடத்திட்ட வடிவமைப்பு பின்தொடரும் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது.

# பள்ளித் தலைமை முன்னேற்றத்திற்கான பாடத்திட்ட வடிவமைப்பு

தலைமை மையம், பள்ளித் தலைமை முன்னேற்றத்திற்கான பாடத்திட்ட வடிவமைப்பை, தன்னுடைய முக்கிய கடமையாக எண்ணி வடிவமைத்துள்ளது. பள்ளி உருமாற்றத்திற்கு அச்சாணியாக விளங்குபவர்களைத்தான் பாடத்திட்டம், தலைவர்களாக கருதுகிறது ஒவ்வொரு குழந்தையும் கற்கிறது, ஒவ்வொரு பள்ளியும் சிறக்கிறது என்பதை உறுதிபடுத்திக் கொள்ள அனைத்து பிள்ளைகளையும், "ஆமாம், என்னால் முடியும், கட்டாயமாக முடியும்" என்பதிலிருந்து "நம்மால் முடியும், கட்டாயமாக முடியும்" என்ற மனப்பான்மையோடு ஒவ்வொரு சவாலையும் ஏற்றுக் கொண்டு அணுகவும், பொறுப்பேற்றுக் கொள்ளவும், பள்ளித் தலைவர்களுக்கு அறிவு திறன் மற்றும் தன்னம்பிப்கையை கொடுப்பதும் தான் பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். பள்ளித் தலைவர்கள் தங்கள் மீது நம்பிக்கை கொள்வது சுய மற்றும் தொழில் சார்ந்த திறன் வளர்த்தல், சக ஆசிரியர்களை வழிநடத்துவதற்கான கற்றல், கற்பித்தல் முறைதிறன்களை சீர்படுத்துதல், குழந்தைகளின் உரிமைகளை அறிந்து கொள்ளுதல், நற்பயனளிக்கும் விதத்தில் பங்குதாரர்களோடு ஒப்பந்தம் செய்து கொள்ளுதல் ஆகிய இந்த கண்ணோட்டத்துடன் தான் சூஊளுடு பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## குறிக்கோள் (Overaching Goals)

மாணவர்கள் கற்றலையும், முன்னேற்றத்தையும் கருத்திற்கொண்டு, பள்ளியை உருமாற்றுவதற்கு, பள்ளித் தலைவர்களுக்கு உதவியாக இருப்பது.

## வழிகாட்டும் கொள்கைகள் (Guiding Principles)

அனைத்து பள்ளித் தலைவர்களுக்கும், தங்கள் தொழிலில் வளர்ந்து சிறப்புற வேண்டும் என்று விருப்பப்படுகிறார்கள் என்ற அனுமானத்தோடுதான், பாடத்திட்ட வடிவமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. பெரியவர்கள் வெவ்வேறு விதமாக கற்கிறார்கள். சரியான பாடங்கள், அதிலும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய மற்றும் வெவ்வேறு இந்திய மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யக்கூடிய பாடங்களை கொடுக்கப்படும்போது, பள்ளித் தலைவர்கள் தங்கள் கற்கும் திறனுக்கேற்ப அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். பாடத்திட்டமானது தத்துவார்த்த கொள்கைகளை உருவாக்கினாலும், அதன் பொருளடக்கமும், செயல்முறைகளும், பள்ளித் தலைமை பயிற்சியில் தான் வேரூன்றி இருக்கிறது. பள்ளி நிர்வாகிகள், சமூகம் மற்றும் சக ஆசிரியர்களுடன், பள்ளித் தலைவர் வைக்கும் தொடர்பானது மாறக்கூடியது மற்றும் இடைவிடாது வளர்ச்சி அடைகிறது என்ற புரிதலின் அடிப்படையில் தான் பாடத்திட்டம் வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது.

## பாடத்திட்டத்தைச் செயல்முறைப்படுத்தப்படுதல் (Curriculum Implementation)

பள்ளித் தலைவர்களுக்கு கிரகிக்கும் திறனை (Capacity Building) வளர்ப்பதற்கு பங்குபெறும் செயல்முறையை, வடிவமைப்பு மேற்கொள்கிறது. அனுபவம் மூலம் கற்றல், அறிவுரை கேட்டல், மிகச் சரியாக பிரதிபலித்தல் மற்றும் களத்தில் பணியாற்றுதல் போன்ற வழிமுறைகள் மூலம்தான் பாடத்திட்டம் செயலாக்கப்படுகிறது. இடைவிடாது மெருகேற்றவும், பள்ளித் தலைவர்கள் மற்றும் நடத்துபவர்களை உண்மையான அனுபவங்களுக்கு அருகாமையில் கொண்டு வரவும், இவ்வடிமைப்பு விழைகிறது.

# முக்கிய பகுதிகள் (Key Areas)

ஆரம்ப பள்ளிகளில், பள்ளித் தலைமை வளர்ச்சி அடைவதற்கு தேவையானவற்றின் அடிப்படையில், பாடத்திட்ட வடிவமைப்பு ஆறு முக்கிய பகுதிகளை வரையறுக்கிறது. இந்த பகுதிகள், பள்ளி உருமாற்றத்திற்கும், பள்ளித் தலைவர்களின் தொழில் சார்ந்த வளர்ச்சிக்கும் தேவையான தெளிவாக வரையறுக்கப்பட்ட நோக்கங்களையும், பொருளடக்கத்தையும் உள்ளடக்கியதாகும்.



பள்ளி உருமாற்றத்திற்கும் மற்றும் அதை அடைவதற்கும் உதவும் பள்ளித் தலைவரின் முக்கிய பங்கின் முழுமையான தோற்றத்தை உருவாக்கும் நோக்கத்தோடு, இந்த ஆறு முக்கிய பகுதிகளும் நெருக்கமாகப் பின்னிப் பிணையப்பட்டிருக்கின்றன. பள்ளியை, குழந்தைகளை உயிர்ப்புடன் வளர்க்கும் இடமாகவும், முழுமையான முன்னேற்றத்திற்கான இடமாகவும் செய்யக்கூடிய கற்றல் அமைப்பாக, இந்த வடிவமைப்பு எண்ணுகிறது. பள்ளித் தலைவர்களிடையே, நேர்மறை சுயபடிமத்தை உருவாக்கும் சுய திறனை சுற்றியே பாடத்திட்டம் அமைகிறது. அதோடு, சமத்துவம் மற்றும் பாகுபாடின்மை போன்ற மதிப்புகளினால் வழிகாட்டப்பட்டு, பிரதிபலிக்கும் பயிற்சியாளர்களாக அவர்கள் ஆவதற்கு ஊக்கமளிக்கிறது.

இந்தியாவில் இருக்கும் பலதரப்பட்ட சூழலில் இருக்கும் பள்ளிகளுக்கேற்ப, சிறப்பு பகுதிகளை ஆராயவும், புரிந்து கொள்ளவும், இந்த வடிவமைப்பு இடம் கொடுக்கிறது. இதனால் – மலைப்பிரதேசங்கள், பாலைவனம் மற்றும் பழங்குடி மக்கள் வாழும் பகுதிகள், மிக அதிக மழையால் அடிக்கடி வெள்ள அபாயத்திற்குட்படும் பகுதிகள், கலவரங்கள் மிகுந்த பகுதிகள், இயற்கை அல்லது மனதினால் ஏற்படும் இடர்பாடுகள் அதிகமாக இருக்கும் இடங்கள் – போன்ற பகுதிகளில் இருக்கும் பிரத்யேக சவால்களை புரிந்து கொண்டு அவற்றை சமாளிப்பதற்கு வழிவகுக்க முடிகிறது. இதற்கு நிகராக சிறிய மற்றும் பல்வேறு நிலையிலிருக்கும் பள்ளிகளின் பிரத்யேக சவால்களுக்கும், சிறப்புக் கவனத்தை அளிக்கிறது.

## கூறு 1 : பள்ளித் தலைமை பற்றிய காட்சி / தோற்றம்

இது தலைமை பற்றியும், பள்ளி உருமாற்றத்தின் மீது அது ஏற்படுத்தும் தாக்கத்தை பற்றியும் புரிந்து கொள்ளுதலை உருவாக்க விழைகிறது. இது பள்ளியை ஒரு கற்கும் அமைப்பாகவும், குழந்தைகளின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் ஏற்ற இடமாகவும் மற்றும் இடைவிடாத பரிசோதனைக்கும், மாற்றத்திற்குமான அடித்தளமாகவும் பார்ப்பதற்கான தத்துவார்த்த புரிதலை உருவாக்குகிறது.

### நோக்கம்

- **பள்ளித் தலைமைப் பண்பு மற்றும் மாற்றத்திற்கும் மேம்பாட்டிற்குமான தொலைநோக்குப் பார்வையைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.**

### பிரிவு 1 : பள்ளி ஒரு கற்றல் அமைப்பாக இருப்பது

- பள்ளி ஒரு சமூக நிறுவனமாக இருப்பது
- மாறும் தன்மையுடைய பள்ளி அமைப்பு
- பள்ளிகளின் கருத்து பரிமாற்ற செயல்முறைகள்
- கற்பதற்கும், வளர்ச்சிக்கும் பள்ளி அடித்தளமாக இருப்பது.

### பிரிவு 2 : பள்ளி தலைமை : பலதரப்பட்ட பங்காற்றல் மற்றும் தனித்தன்மைகள்

- தலைவர் தொலைநோக்குப் பார்வையாளராக
- தலைவர் மாற்றத்தை தொடங்குபவராக
- தலைமை ஊக்கமளிப்பவராகவும், உறுதியுள்ளவராகவும் மக்களை சார்ந்தவராகவும், வாழ்நாள் முழுதும் கற்பவராகவும்
- தலைவர் பிரதிபலிக்கும் பயிற்சியாளராக
- பள்ளிகளின் நற்பயன் மேம்படுவதற்கான தலைமையின் முக்கியத்துவம்

### பிரிவு 3 : பள்ளிகளுக்கான தொலைநோக்குப் பார்வையை உருவாக்குதல்

- பள்ளி உருமாற்றத்திற்கான தொலைநோக்கு
- சூழலையும், கட்டுபாடுகளையும் மதிப்பிடுதல் மற்றும் புரிந்து கொள்ளுதல்
- பள்ளி முன்னேற்ற திட்டம் மூலம் தொலைநோக்குப் பார்வையை செயல்படுத்துதல்
- குறிப்பிட்ட கால அவகாசத்தில், மறுபரிசீலனை செய்வதன் மூலம் மாற்றத்தைக் கண்காணிப்பது.

### பிரிவு 4 : உருமாற்றத்தைப் புரிந்து கொள்ளுதல்

- பள்ளி உருமாற்றத்திற்கான வழிகாட்டும் கோட்பாடுகள் : உள்ளடக்குவது, சமத்துவம் மற்றும் தரம்.
- பள்ளியை ஒருங்கமைப்பாகப் பார்ப்பது : யோசனைகள், திறன்கள் மற்றும் நோக்கங்கள் பள்ளி மாற்றத்திற்கே
- தன்னை உருமாற்றிக கொள்வதன் வலிமை : மனப்பாங்கும், செயலும், யோசித்தல் மற்றும் பிரதிபலித்தல், பெற்றோர்கள், சக ஆசிரியர்கள், சமூக உறுப்பினர்களோடு தொடர்பு கொள்வது.
- மாற்றத்தோடு ஈடுபடுவது : எதிர்ப்பை எதிர்கொள்வது மற்றும் வாய்ப்புகளை உருவாக்குவது.

### பிரிவு 5 : குழந்தையை முதன்மையாக வைத்தல்

- குழந்தை பருவத்தைப் புரிந்து கொள்ளுதல்
- குழந்தையின் முழுமையான முன்னேற்றம்
- பள்ளியில் குழந்தையின் உரிமை
- சமத்துவம், பாகுபாடின்மை மற்றும் அனைவருக்கும் மரியாதை செலுத்துதலை பயிற்சி செய்வது

### பிரிவு 6 : பணி ஒழுக்கத்தை உருமாற்றுவது

- நோக்கத்தை கருத்திற்கொண்டு, அதை நோக்கிச் செல்வது
- பல்வேறு தோற்றங்களை ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் புரிந்து கொள்ளுதல்
- அர்த்தமுள்ள பரிமாற்றத்திற்கான செயல்முறையை உருவாக்குதல்
- மாற்றத்திற்கும், திருத்தலுக்கும் தயாராக இருத்தல்
- பகிர்ந்து கொள்ளப்பட்ட பொறுப்பை ஆதரிப்பது

## முக்கிய பகுதி 2 : சுய முன்னேற்றம்

கிரகிக்கும் திறன், மனப்பான்மை மற்றும் மதிப்பு – இவற்றை சார்ந்த நேர்மறையான சுயதத்துவத்தை உருவாக்குவது, பிரதிபலிக்கும் பரஸ்பர தொடர்பு மூலம் சுயமுன்னேற்றம், இடைவிடாத கற்றல் மற்றும் சுயவளர்ச்சி, மற்றவர்களின் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் ஆகியவற்றை உருவாக்குவதில் தலைவரின் முக்கிய பங்கு – இவைதான் இந்த பகுதியின் முக்கிய கவனக்குவியம் ஆகும்.

## நோக்கம்

- **தன்னைப் பற்றியும் பள்ளியோடும் மற்றவர்களோடும் தங்களின் உறவு பற்றியும் மற்றும் சுய வளர்ச்சி பற்றியும் புரிந்து கொள்ளுதல்.**

### பிரிவு 1 : தன்னை புரிந்து கொள்ளுதல்

- தன்னைப் புரிந்துகொள்ளுதல் : தனிப்பட்ட முறையிலும், பள்ளியில் தொழில் முறையிலும்
- பணி வாழ்க்கையின் அர்த்தத்தையும், நோக்கத்தையும் புரிந்து கொள்ளுதல்
- நேர்மறை சுய தத்துவம் மற்றும் சுய மதிப்பை உருவாக்குதல்

### பிரிவு 2 : மற்றவர்களுடனான உறவு

- பள்ளி ஒரு சமூக சூழலில் தன்னை இருத்திக் கொள்வது
- முரண்பாடான எதிர்பார்ப்புகள் மற்றும் பல்வேறு விதமான பங்களிப்புகளை எதிர்கொள்வது
- செல்வாக்கு மற்றும் தொடர்பு வட்டம்

### பிரிவு 3 : பள்ளி சூழலில் தன்னுடைய இடம்

- சுய முன்னேற்ற நோக்கங்கள் மற்றும் நிறுவன நோக்கங்களை ஒருங்கிணைத்தல்
- பள்ளிச் செயல்பாடுகளில் பல்வேறு நிலையில் பங்காற்றுவது
- தொழில் சார்ந்த நோக்கங்கள் மற்றும் பயிற்சிகளின் ஒருங்கிணைத்தலை பிரதிபலித்தல்

### பிரிவு 4 : தொழில் சார்ந்து தன்னை உருவாக்கிக் கொள்வது

- மக்களோடு பணி செய்தல் மற்றும் தொடர்பு கொள்ளுதல்
- சமூக கற்றலின் இடமாக பள்ளி இருப்பது மற்றும் இணைந்து வளர்வது
- சமூகம், நீதி மற்றும் ஒழுக்கம் சார்ந்த பொறுப்புணர்ச்சியை உருவாக்குவது

## முக்கிய பகுதி 3 : கற்பித்தல்–கற்றல் செயல்முறையை உருமாற்றுவது

பள்ளியானது, ஆராய்ச்சிக்கும், புதியன செய்வதற்குமான இடம் என்று புரிந்து கொள்வதன் மூலம், கற்பித்தல்–கற்றல் முறையை உருமாற்றுவதற்காக, தலைவரின் கிரகிக்கும் திறனை வளர்ப்பது மற்றும் வகுப்பறை செயல்முறைகள், குழந்தைகளை சுற்றியே இருக்குமாறு செய்வதும்தான் இந்த பகுதியின்

நோக்கம். தங்கள் பள்ளிகளில், கற்பித்தல்—கற்றல் செயல்முறைகளை உருமாற்றுவதற்காக, பள்ளித் தலைவர்களின் கிரகிக்கும் திறனை வளர்க்க திட்டமிடுவதை இது விழைகிறது.

## நோக்கம்

- **கற்பித்தல்—கற்றல் செயல்முறையை, குழந்தைகளை மையப்படுத்திய ஆக்கபூர்வ ஈடுபாடாக உருமாற்றுவது**

### பிரிவு 1 : பள்ளியும், கல்வியின் நோக்கமும்

- விசாரிக்கும் மனநிலையை வளர்த்தல்
- விமர்சிக்கும் யோசனைக்கான கல்வி
- ஆற்றல் பெறுவதற்கான கல்வி
- பொறுப்புள்ள குடிமக்களை உருவாக்குதல்

### பிரிவு 2 : குழந்தையை மையமாக வைத்து கற்பிக்கும் கலையை புரிந்து கொள்ளுதல்

- வளரும் குழந்தையின் முன்னேற்ற மற்றும் கற்றல் தேவைகள்
- குழந்தையைசுறுசுறுப்போடு,கற்பவராகவும்அறிவைநிர்மானிப்பவராகவும் கருதுதல்.
- கற்பிப்பவருக்கும், கற்பவருக்கும் கற்றலை சந்தோஷமானதாகவும், ஆக்கபூர்வமானதாகவும் செய்வது.
- கற்பித்தல்—கற்றலை, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் கூட்டு ஆராய்ச்சியாக செய்வது
- வெவ்வேறு சூழலில் இருக்கும் வெவ்வேறு சமூக பாகுபாட்டினை உள்ளடக்கிய கற்றல்

### பிரிவு 3 : சாதகமான கற்பித்தல்—கற்றல் சூழலை உருவாக்குவது

- கவர்ச்சியான, சுறுசுறுப்பான பணி மற்றும் வகுப்பறை சூழல்
- வகுப்பறையையும், வளங்களையும் ஆக்கபூர்வமாகவும் கலைநுட்பத்துடனும் அமைப்பது
- சுறுசுறுப்பான கற்றலுக்கான வாய்ப்பை பலப்படுத்துவது
- உள்ளடக்கும் சூழல் : பரஸ்பர மரியாதை, சகிப்பு தன்மை மற்றும் பொது அடையாளத்தை உணர்தல்
- வகுப்பறையில் இதமான, பாதுகாப்பான, அக்கரை காட்டப்படும் சூழல்.

### பிரிவு 4 : வகுப்பறை செயல்முறைகளின் நற்பயனை மேம்படுத்துதல்

- கவனித்தல், கருத்துக்கூறல் மற்றும் கண்காணிப்பு

- குழந்தைகளோடு நேரடியாக தொடர்பு கொள்ளுதல் மற்றும் ஒவ்வொரு குழந்தையின் வளர்ச்சியையும் கவனிப்பது
- பயிற்றுவித்தல் மற்றும் அறிவுரைத்தல்
- கற்பித்தல்–கற்றல் செய்முறையில் தொழில்நுட்பத்தை புகுத்துதல்
- ஆராயவும், பரீட்சித்து பார்க்கவுமான சுதந்திரத்தை ஊக்குவிப்பது

**பிரிவு 5 : ஆசிரியரை, தொழில்முறையில் உருவாக்குவது**

- ஆசிரியர் : பள்ளி உருமாற்றத்திற்க முக்கியமானவர்
- ஆசிரியர் தலைமையை ஊக்குவிப்பது
- பிரதிபலிக்கும் பயிற்சியாளராக ஆசிரியரைப் பார்ப்பது
- வகுப்பறைக்கு உள்ளேயும், வெளியேயும் ஆசிரியர் – மாணவர் தொடர்பை எளிதாக்குவது
- ஆசிரியர் பிரச்சினைகளை எதிர்கொள்வது
- ஆசிரியரின், தொழில் சார்ந்த வளர்ச்சியை ஊக்குவிப்பது

**பிரிவு 6 : கற்பித்தல்–கற்றல் செய்முறையை வளமாக்குவது : வகுப்பறைக்கு வெளியேயும் பார்ப்பது**

- பெற்றோர்கள் பார்வை மூலம், குழந்தையை புரிந்து கொள்வது
- குழந்தை கற்றலுக்கு, இல்லத்தின் உதவி
- சமூக அறிவு மற்றும் ஆக்கபூர்வ தன்மை மூலம் பள்ளி அனுபவத்தை வளமாக்குவது
- பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்குமான கருத்துக்கூறல் சுழற்சியை வலிமைப்படுத்துவது
- சுற்றுவட்டாரத்தைக் கற்கும் இடமாக மாற்றுவது

## முக்கிய பகுதி 4 : குழுக்களை உருவாக்கி வழிநடத்துவது

நற்பயனளிக்கும் குழுக்களை உருவாக்கி, தக்க வைத்து கொள்வதற்கான திறனை எதிர்கொள்வது. குழுவாக இயங்குவது, இணைந்து செயல்படுதல், குழுப்பணி, கருத்து வேறுபாடுகளை சரிசெய்வது சரிசெடீநுவது மற்றும் குழு உறுப்பினர்களின் தொழில் முன்னேற்றத்திற்கான வாய்ப்பை உண்டாக்குவது – இவற்றைப் புரிந்து கொள்வதில் கவனம் செலுத்துகிறது

**நோக்கம்**

- **இணைந்து செயல்படுதல் மற்றும் குழுவில் பணி செய்வதை சுலபமாக்குவது**

### பிரிவு 1 : குழுக்களை உருவாக்குவது

- குழு உறுப்பினர்களின் வலிமை மற்றும் திறன்களைப் புரிந்து கொள்வது
- இணைந்தும், கூட்டுறவாகவும் செயல்படுதலை உருவாக்குவது
- பொறுப்புகளையும், திறமைகளையும் பொருத்துவது.

### பிரிவு 2 : குழுப் பணியை ஊக்கப்படுத்துவது

- ஒன்று சேர்ந்து திட்டமிடல்
- தொழில் சார்ந்த கலந்துரையாடல் மற்றும் உரையாடலை ஆதரிப்பது
- ஒன்று சேர்ந்து செயல்படுவது
- வளமிக்க யோசனைகளில் ஆய்ந்த ஈடுபாடு கொள்ள பணியாளர்களின் கூட்டத்தை ஒரு மேடையாக பயன்படுத்துவது
- பிரதிபலிப்பு மற்றும் கருத்துக்கூறல் இயக்கத்தை உருவாக்குவது

### பிரிவு 3 : குழுத் தலைவராக இருப்பது

- நற்பயனளிக்கும் குழுப்பணிக்காக வாய்ப்புகளை உருவாக்குவது
- குழுவில், நற்பயனளிக்கும் கருத்து பரிமாற்றலை உருவாக்குவது
- குழுப்பணியில் முடிவெடுப்பது
- வேலையை, குழு மூலம் செயல்படுத்துவது
- கருத்து வேறுபாடுகளை சரிசெய்வது

## முக்கிய பகுதி 5 : புதுமை காணலை வழிநடத்துவது

இடைவிடாத மாற்றம் மற்றும் புதுமை காணல் மூலம் கட்டமைப்பு மற்றும் திட்டங்களை உருமாற்ற, இந்தப் பகுதி விழைகிறது. ஒருங்கிணைந்த முயற்சி மூலம் புதிய யோசனைகளை ஆதரிக்கும் சூழல் அமைப்பு, கட்டமைப்பு, செயல்முறைகள் மற்றும் புதுமை காணல் கலாச்சாரத்தை உருவாக்குவது ஆகியவற்றில் உருவாக்குவதில் கவனம் செலுத்தப்படுகிறது.

## நோக்கம்

- **புதுமை காணல் செயல்பாடுகள் மூலம் உருமாற்றத்தை சுலபமாக்குவது**

### பிரிவு 1 : புதுமை காணல் கற்றல் அமைப்பின் இதயம்

- பள்ளித் தலைவர் – புதுமை காணலுக்கு முக்கிய உந்துசக்தியாக இருப்பவர்
- புதிய யோசனைகளைத் தேடல் : உரையாடல்
- புதுமை காணல் : பள்ளி வளர்ச்சிக்கு இன்றியமையாதது
- சாதாரண கட்டமைப்பிற்கு அப்பாற்பட்டுப் பார்ப்பது

### பிரிவு 2 : பள்ளியில் புதுமை காணல் கலாச்சாரத்தை உருவாக்குவது

- புதுமை காணலை வளர்ப்பது : சோதித்து பார்ப்பதற்கும், ஆராய்ச்சிக்கும் போதிய இடம் உருவாக்குவது
- தேவையான வளங்கள் மற்றும் கல்வி சார்ந்த உதவியை உறுதிப்படுத்துவது
- தனித்துவத்தை மதிப்பது மற்றும் பல்வேறு காட்சிகளுக்கு இடம் கொடுப்பது.
- மாற்றத்திற்கான எதிர்ப்பைப் புரிந்து கொண்டு, அதை சரிசெய்வது
- புதிய கருத்துக்களையும் செயல்களையும் ஒப்புக் கொண்டு வெகுமதி அளிப்பது
- பள்ளியில் புதுமைக் காணலை கண்டுபிடித்து, ஆவணப்படுத்துவது

### பிரிவு 3 : புதுமை காணல் மூலம் பள்ளியை வேறு மாதிரி கற்பனை செய்வது

- பள்ளி நிலையில் புதுமை காணல் : பாடத்திட்டத்தின் அமைப்பு, வருட நாட்காட்டி, பணி பகிர்தல், நிதி ஒதுக்கீடு, மதிய உணவு, நிதி நிர்வாகம், பொருள் திரட்டுவது, இருக்கும் வளங்களை முழுவதும் பயன்படுத்துவது, வருடாந்திர விழாக்களை கொண்டாடுவது, சமூக கூட்டங்கள் மற்றும் பணியாளர் கூட்டங்களை நடத்துதல்
- வகுப்பறை நிலையில் புதுமை காணல் : கற்பித்தல்–கற்றல் செயல்முறைகள் வகுப்பறை அமைப்பு, அட்டவணை தயாரிப்பு, வகுப்பறை நிர்வாகம் – இவற்றை மேம்படுத்துதல்
- மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூகத்தை புதுமை காண்பவர்களாகப் பார்ப்பது.

## முக்கிய பகுதி 6 : பங்குதாரர்களின் பங்களிப்பை வழிநடத்துவது

பள்ளி உருமாற்றத்தை வழிநடத்துவதென்பது, பணிக்கு உள்ளேயும், வெளியேயும் மக்களின் பங்களிப்பை உருவாக்குவது. பள்ளிக்கும் பெற்றோர்களுக்கும், சமூக உறுப்பினர்கள், கல்வித் துறையிலிருக்கும் நிர்வாகிகள், சுற்று வட்டாரத்தில் இருக்கும் இதரப் பள்ளிகளுக்கும் இடையே பொருள் பொதிந்த தொடர்பை உண்டாக்குவதன் அவசியத்தை, இந்த பகுதி உணர்த்துகிறது. பலதரப்பட்ட பங்குதாரர்களோடு பங்கு கொள்வதற்கான வாய்ப்பைத் திறம்பட பள்ளித் தலைவர்கள் உருவாக்க உதவுவது தான் இதன் நோக்கம்.

## நோக்கம்

- **பள்ளி உருமாற்றத்திற்கு, பெற்றோர்கள், சமூகம் மற்றும் கல்வித் துறை அதிகாரிகளின் பங்களிப்பை சுலபமாக்குவது**

### பிரிவு 1 : இல்லம் – பள்ளி பங்களிப்பு

- இல்லம் – பள்ளி தொடர்புக்கு இடம் உருவாக்குவது
- கற்றலும், முன்னேற்றமும் – ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் இணைந்த பொறுப்பாகும்.
- பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் வெவ்வேறு புலப்பாடு மற்றும் எதிர்பார்ப்புகளை கவனத்தில் கொள்வது
- பள்ளி நிர்வாகத்தில், பெற்றோர்களின் பங்கை உற்சாகப்படுத்துவது
- பெற்றோர்கள் கற்பதற்கு பள்ளி ஒரு மேடையாக இருப்பது.

### பிரிவு 2 : சமூகத்தோடு இணைந்து பணி செய்வது

- பள்ளி சமூக உறவை புரிந்துகொள்வது
- பள்ளியின் சமூக பங்களிப்பிற்கு இடம் கொடுப்பது
- பள்ளி நிர்வாக குழு மூலம் சமூக பங்களிப்பை நிறுவுவது
- பள்ளி முன்னேற்ற திட்டத்தில், சமூகத்தின் பங்கு
- சுற்றுப்புறத்தில் இருக்கும் அரசியல் தலைவர்களுடன் பரஸ்பர புரிதரத பணி செய்வது

### பிரிவு 3 : அமைப்போடு பணி செய்வது

- கல்வி அமைப்பில், பள்ளி ஒரு அங்கமாக இருப்பது
- கல்வி நிர்வாகிகளோடு நற்பயனளிக்கும் தொடர்பு வைத்துக் கொள்வது
- பள்ளி முன்னேற்றத்திற்கான தேவைகள் மற்றும் அமைப்பு நிலையில் இருக்கும் தேவைகளை சீர்தூக்கி பார்ப்பது
- சுற்றுவட்டாரத்தில் இருக்கும் வள உதவு நிறுவனங்களோடு தொடர்புபடுத்திக் கொள்வது
- பள்ளிச் சமூகங்களுக்கிடையே சிறந்த பயிற்சி முறைகளைப் பகிர்ந்து கொள்வது, ஏற்றுக் கொள்வது மற்றும் பங்காற்றுவது.

## முக்கிய பகுதி 7 : பள்ளி நிர்வாகத்தை வழிநடத்துதல்

முக்கிய பகுதி 7 : இப்பகுதி பள்ளி நிர்வாகம் மற்றும் பொருளாதாரத்தை வழிநடத்துவதில் கவனம் செலுத்துகிறது. அந்தந்த மாநில அரசுகள் கொடுக்கும் நிர்வாக விதிமுறைகளையும், வழிகாட்டுதலையும், அதோடு பள்ளி

பொருளாதாரம், வரவு செலவு திட்டம் மற்றும் நிதியை உபயோகப்படுத்துதலையும் புரிந்து கொள்ள, இந்த பகுதி உதவுகிறது. பள்ளியை வழிநடத்தும்போது, மனிதவளம் மற்றும் கட்டமைப்பை நிர்வகித்தல் மிக முக்கியம். இந்தப் பகுதி, நற்பயனளிக்கும் விதத்தில், இந்த வளங்களை எவ்வாறு நிர்வகிக்கலாம் என்று ஆராய்கிறது. பள்ளித் தலைவர்கள் நற்பயனளிக்கும் அடிப்படை தகவல் அமைப்பை உருவாக்கவும், அதன்மூலம் பள்ளி உருமாற்றத்தை வழிநடத்தவும் உதவ பயன்படுகிறது என்பதால் இப்பகுதி முக்கியமாக கருதப்படுகிறது.

### நோக்கம்

- **பள்ளித் தலைவர்களிடையே நற்பயனளிக்கும் நிர்வாகம், பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்துதல், வளங்களின் நிர்வாகம் மற்றும் தகவல் சார்ந்த முடிவெடுத்தல் இவற்றிற்கான அறிவு மற்றும் திறனை வளர்த்தல்.**

### பகுதி 1 : பள்ளி நிர்வாகத்தை புரிந்து கொள்ளுதல்

- பள்ளி உருமாற்றத்தின் சூழலுக்கேற்ப பள்ளித் தலைவரின் பங்கை உருவாக்குவது.
- பள்ளி செயல்பாடுகள், சட்டங்கள், பள்ளித் தலைவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் நன்னடத்தை, பணி, விடுப்பு மற்றும் ஓய்வூதியம்) பற்றிய அறிவு.
- மாநில திட்டங்கள் மற்றும் செயலாக்க திட்டங்களின் வழிகாட்டுதலை புரிந்து கொண்டு, அவற்றைப் பள்ளி அளவில் செயலாக்குவது.
- சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு தொடர்பு கொள்ளும்போது கோப்புகளைத் தயாரித்தல், வரைவு செய்தல் மற்றும் பல்வேறு பிரச்சனைகளை குறித்துக் கொள்வது போன்ற செயல்பாடுகளைப் புரிந்து கொள்வது.
- ஆசிரியர்களின் வருடாந்திர மந்தண அறிக்கை (ACR), வருடாந்திர செயல்பாட்டின் மதிப்பீட்டு அறிக்கை (APAR).
- ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பணியாளர்களோடு இணைந்து, பள்ளி நிலையின் திட்டமிடுதலை, கணக்கிடக்கூடிய அமைப்பாக உருவாக்குவது.

### பகுதி 2 : பள்ளியின் பொருளாதாம்

- பொருளாதாரம் மற்றும் வளங்கள் நிர்வாகத்தின் முக்கியத்துவம்.
- வரவு செலவு திட்டம் மற்றும் கணக்கிடக்கூடிய அலகீடுகள் பற்றிய அறிவு.
- நிதி சார்ந்த செயல்பாடுகள் மற்றும் நிதி பங்கீட்டு விதிகளின் சுய அதிகாரம்.
- வரவு செலவு திட்டம் மற்றும் கணக்கிடுதல் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- பணியாளர்களின் சம்பளம் மற்றும் நிலுவை நிர்ணயம், ஓய்வூதியம்

போன்றவற்றின் நிதிச் செயல்முறைகளை புரிந்து கொள்ளுதல்.

- சம்பளம், நிலுவை, மருத்துவ செலவு, தற்செயலாக நிகழும் செலவுகள், கணக்கு புத்தகம் பராமரிப்பது, தணிக்கை மற்றும் வரி – இவற்றைப் புரிந்து கொள்வது.

## பகுதி 3 : புவி வளம் மற்றும் மனித வளம் பற்றிய திறன்மிகு மேலாண்மை

- மாணவர்களுக்கு, பள்ளிச் சூழலை மகிழ்ச்சியாக மாற்றுதல்.
- பள்ளியில் வசதிகள் இருப்பதையும் மற்றும் வகுப்பறை நன்றாக செயல்படுவதையும், சமூகம் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளோடு சமூக உறவை உருவாக்கி, உறுதி செய்து கொள்வது.
- திறந்தவெளியுடன் கூடிய விளையாட்டு மைதானங்களை உருவாக்குதல்.
- குழந்தைகளின் பாதுகாப்பை குறிப்பிடத்தக்க முறையில் உருவாக்கி, அதற்கான வளங்களைப் பெறுவது.
- பள்ளி செயல்பாட்டிற்குப் பயனளிக்கும் மனித வளங்களை முழுமையாக பயன்படுத்த புதிய வழிகளைக் கையாளுதல்.
- சம தரமுடைய பள்ளிகள், சமூகம் மற்றும் துறைகளோடு மனித வளங்களை பெறுவதற்கான தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது.
- ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களின், நிர்வாக மற்றும் நிதி தேவைகளைப் பகிர்ந்து கொள்ளுதல்.

## பகுதி 4 : நல்ல முடிவு எடுப்பதற்கு தகவல் அமைப்பு நிர்வாகத்தை பயன்படுத்துவது

- உருமாற்றத்தை சார்ந்து நல்ல முடிவு எடுப்பதற்கு தேவையான அடிப்படை தகவலை உருவாக்கி, தக்க வைத்துக் கொள்வதே முக்கியமானது.
- மாணவர்களின் தன்மையை மற்றும் வளர்ச்சியை கண்காணிக்க அடிப்படை தகவல் அமைப்பை உருவாக்குவது.
- வெற்றிகரமான வளர்ச்சியை உறுதிப்படுத்த, தேவை சார்ந்த கற்றல் அமைப்பை, மாணவர்களுக்கு உதவுவதற்காக ஏற்படுத்துவது.
- முறையான, அனைவரும் பெறக்கூடிய, தனிநபர் பதிவுகள் மற்றும் பணி விதிமுறைகளைப் பின்பற்றுவதை உறுதி செய்து கொள்வது.
- பொருளாதார அடிப்படை தகவல் மற்றும் பதிவுகள் பராமரித்தல்.
- மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களோடு தொடர்புடைய சேர்க்கை, வருகைப் பதிவேடு, வருடாந்திர செயல்பாடுகளின் நாட்காட்டி, பாடத்திட்டம், பெற்றோர் ஆசிரியர் சந்திப்புகள், குறைபாடுகள் மற்றும் யோசனைகளை மறுபரிசீலனை செய்வது – இவற்றிற்கான செயல்பாட்டிற்கு ஒரு அமைப்பை உருவாக்குவது.

# சிறப்பு கவனிப்புப் பகுதிகள்

இந்தியாவில் இருக்கும் பலதரப்பட்ட பள்ளி சூழலில், பிரத்யேக மாநிலங்களிலும், பிரத்யேக சூழலிலும் இருக்கும் பள்ளிக் கல்வி பிரச்சனைகளை சமாளிக்க, தேவைப்படும் அவகாசத்தையும் சிறப்பு கவனிப்பு பகுதிகளைப் புரிந்து கொள்ளவும், இந்த கட்டமைப்பு உதவுகிறது. அந்தந்த மாநிலத்தில் இருக்கும் சமூக, பொருளாதார, புவியியல் மற்றும் கல்வி சார்ந்த சவால்களைக் கருத்திற்கொண்டு, பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்குச் சமமாக, சிறிய மற்றும் பல்வேறு நிலையிலிருக்கும் பள்ளிகளின் பிரத்யேக சவால்களைச் சந்திப்பதற்கும் சிறப்புக் கவனம் கொள்கிறது

### சிறப்பு கவனிப்புப் பகுதி 1: பழங்குடியினர் வாழும் பகுதியிலிருக்கும் பள்ளிகளை வழிநடத்துவது

கலாச்சாரம், சமூக சூழல் மற்றும் பொருளாதாரத்தில் தனிப்பட்டு இயங்கும் பள்ளிகளின் மீது கவனம் செலுத்தப்படுகிறது. தேவையான, அர்த்தமுள்ள பள்ளி அனுபவத்தை குழந்தைகளுக்கு உருவாக்க, பள்ளித் தலைவர்கள், குழந்தைகள் மற்றும் சமூகத்தின் தற்போதைய நிலவரம், தேவை மற்றும் எதிர்பார்ப்புகளை முழுவதும் புரிந்து கொள்வது மிக அவசியம். இவற்றைக் கருத்திற்கொண்டு, கீழ்க்கண்ட தலைப்புகளில் கவனம் செலுத்துவது அவசியம்.

- பள்ளி செயல்படும் சமூக – கலாச்சார சூழலைப் புரிந்து கொள்வது
- ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகள் பள்ளிக்குக் கொண்டு செல்லும் அச்சடிப்புகளை புரிந்து கொண்டு ஏற்றுக் கொள்வது
- மொழி சார்ந்த வேறுபாட்டின் அடிப்படையில், பழங்குடி குழந்தைகளின் தேவைகளைப் புரிந்து கொள்வது
- மாணவர்கள் வராதிருத்தல், இடம் பெயர்தல் மற்றும் ஆசிரியர்கள் வராதிருத்தல் போன்றவற்றிற்கு காரணமாயிருக்கும், பள்ளி, சமூகம் மற்றும் குடும்பம் சார்ந்த பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளுதல்.
- பழங்குடியின குழந்தைகளின் தேவைக்கேற்ப, பாடத்திட்டம், புத்தகங்கள் மற்றும் கற்பிக்கும் கலையை அமைத்துக் கொள்வது.
- பழங்குடியினர் வாழும் பகுதியில், பள்ளி–சமூக உறவு முறை

- பழங்குடியினர் வாழும் பகுதியில், தங்கிப் படிக்கும் பள்ளிகளை நிர்வகிப்பது

## சிறப்பு கவனிப்பு பகுதி 2 : சிறிய மற்றும் பல்நிலைப் பள்ளிகளின் கற்பித்தல்கற் றலை வழிநடத்துவது

ஒரு ஆசிரியர், இரண்டு ஆசிரியர்கள் மற்றும் சிறிய பள்ளிகளில் பணியாற்றும் பள்ளித் தலைவர்கள் செயலாற்றும் பலதரப்பட்ட பங்களிப்புகளில் இந்த பகுதி கவனம் செலுத்துகிறது. ஆசிரியர்களின் பங்கு, சந்தர்ப்பம், வளங்கள் மற்றும் நேர பயன்பாடு பற்றிய குறைந்த அளவு புரிதல் தன்மையை கொண்டதுதான் இந்த பள்ளிகள் என்பது கவனத்தில் கொள்ளப்படுகிறது. ஆதலால் இந்த பகுதி ஆசிரியர்கள், பல்வேறு நிலையிலிருக்கும் சூழலில், நற்பயனளிக்கும் விதத்தில் கற்பிக்கவும், கற்கவும் ஆற்றலளித்து வழிகாட்ட இப்பகுதி முற்படுகிறது.

- சுற்றுவட்டாரத்திலும், கல்வி அமைப்பு சூழலிலும் இருக்கும் தனிப்பட்ட பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளுதல்.
- சமூக–பொருளாதார மற்றும் கலாச்சார வேறுபாடுகளை ஏற்றுக் கொள்ளக்கூடிய சூழலை உருவாக்குதல்.
- பொருத்தமான பாடத்திட்டம், நிலைக்கு தக்கவாறு TLMs உருவாக்குவது, கற்பவர்களை மதிப்பீடு செய்ய வழிவகுத்தல்
- மாணவர்களை நிர்வகித்தல் : மாணவர்களுக்குள் தொடர்பு ஏற்படுத்துவது, உட்கார வைக்கும் முறை, மாணவர்களை பாதுகாப்பது மற்றும் ஆதரிப்பது
- கற்கும் குழுக்கள் : வெவ்வேறு நிலையிலிருப்பவர்கள், சமவயது உடையவர்கள் மற்றும் வயது வித்தியாசமுடையவர்கள்
- ஆசிரியர்களும், மாணவர்களும் நற்பயனளிக்கும் வகையில் நேரத்தை பயன்படுத்துவது

## சிறப்பு கவனிப்பு பகுதி 3 : கலவரம் மிகுந்த பள்ளிகளை வழிநடத்துவது

இந்தியாவில் சில பகுதிகளில் இனக் கலவரத்தினாலும், பேரிழப்பினாலும் மக்களின் தினசரி வாழ்க்கை குழப்பமுள்ளதாக இருக்கிறது. இந்த பகுதிகளில் இருக்கும் பள்ளிகள் நிறைய சவால்களை சந்திக்கிறது. பள்ளி நடப்பதில் நம்பகமில்லா தன்மை, மன உளைச்சல், மாணவர்களிடத்திலும், பணியாளர்களிடத்திலும் பயம் ஆகியன நிலவுகின்றன. இந்த மாதிரியான சூழலில், பள்ளியின் தினப்படி அலுவல்களை நிர்வகிப்பது, குழந்தைகளைப் பள்ளிக்கு வரவைப்பது, சமூக தொடர்பை உருவாக்குவது. பள்ளிச் செயல்பாடுகளில் அவர்களின் பங்கை நிச்சயப்படுத்துவது – போன்ற சவால்களை பள்ளித் தலைவர் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த சிறப்புக் கவனிப்பு பகுதி, இத்தகைய சவால்களை கவனிக்கிறது.

- குழந்தைகள் மன உளைச்சலிலிருந்தும், பயத்திலிருந்தும் விடுபட

உதவுகிறது

- வகுப்பறையில், அழுத்தம் இல்லாத குழந்தைகளை மையமாக வைக்கும் சூழலை உருவாக்குவது
- பெற்றோர்களின் உதவியோடு, பள்ளியை சுற்றிலும் எந்த ஒரு அசம்பாவிதமும் நடந்து விடாதவாறு ஒரு அரணை உருவாக்குவது
- குழந்தைகள் மற்றும் பள்ளியின் பாதுகாப்பிற்காக சமூகம் மற்றும் காவல்துறையின் உதவியை நாடுவது
- மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் நேர்மறை எண்ணங்களை உருவாக்கிக் கொள்ள, உதவுவது மற்றும் தயார் செய்வது மற்றும் ஒருவருக்கொருவர் சூழலை எதிர்கொள்வதற்கான தைரியத்தைக் கொடுப்பது.
- தற்போது வாழ்க்கையின் நிதர்சனத்தை, பள்ளியில் விவாதித்து, கற்பித்தல்—கற்றல் செயல்முறையில் வெளிப்படுத்துவது.

## சிறப்பு கவனிப்பு பகுதி 4 : கடினமான நிலவமைப்புப் பகுதிகள்

மிக அதிக மழைப்பொழியும் இடங்கள், பாலைவனங்கள், மலைப்பிரதேசங்கள் மற்றும் கடல் சார்ந்த இடங்கள் போன்ற கடினமான நிலவமைப்புப் பகுதிகளில் பள்ளிகளுக்கு, வருடத்தின் பிரத்யேக பருவ காலங்களில், விசேஷ பாதுகாப்பு தேவைப்படுகிறது. அன்றாட வாழ்க்கை முறையைப் பாதிக்கும் பருவநிலை மாற்றங்களைச் சமாளிக்க, போதிய வசதிகள் செய்து தருவது இன்றியமையாததாகிறது. இத்தகைய சவால்களை நற்பயனளிக்கும் விதத்தில் சமாளிப்பதற்கு பள்ளித் தலைவர்களைத் தயார்படுத்துவதுதான் முக்கிய நோக்கமாகும்.

- பருவநிலைக்கேற்ப பிரத்யேக அட்டவணையை தயாரித்துச் செயல்படுவது
- சமூகத் தலைவர்கள் மற்றும் பெற்றோர்களோடு கலந்துரையாடுவதன் மூலம், பள்ளியிலிருந்து இடைநிறுத்தம் இல்லை என்றாக்கி மாணவர்கள் தொடர்ந்து வருவதை உறுதிபடுத்திக் கொள்வது.
- போதிய வசதிகளையும், கல்வி சம்பந்தப்பட்ட வளங்களையும், முன்கூட்டியே ஆய்ந்து சேகரித்து வைத்துக் கொள்வது.
- கடுமையான பருவ நிலையை சமாளிக்க ஆசிரியர்களையும், மாணவர்களையும் தயார்படுத்துவது
- சமூகத்தோடு தொடர்பு ஏற்படுத்தி, சவால்களை சமாளிக்கப் பள்ளிகளைத் தயார்படுத்துவது.

பிரத்யேக சூழலில் இருக்கும் பிரச்சினைகளை சமாளிக்கும் பொழுது பள்ளித் தலைவர்கள் முடிவுகள் எடுப்பதற்கு இப்பாடத்திட்டம் உதவுகிறது.

# வளங்களை உருவாக்குதல்
## ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் சூழல் ஏற்புடைமையாதல்

சூழலுக்கேற்ப பொருத்தமாக வளங்களை உருவாக்குதல். ஒவ்வொரு முக்கிய பகுதிக்கும் அதன் பிரிவுகளுக்கும் ஏற்றவாறு, கற்கும் வாய்ப்புகளை ஏற்படுத்தக்கூடிய, எளிதில் படிக்கக்கூடிய மற்றும் பரிமாறி கொள்ளக்கூடிய வளங்களை உருவாக்குதல். பல்வேறு இடங்களிலிருந்தும் வளங்கள் சேகரிக்கப்படுகின்றன. அவற்றைச் சூழலுக்கேற்ப, தேவைக்கேற்ப இணைத்து உபயோகப்படுத்த, வளக் குழுவிற்கு சுதந்திரம் கொடுக்கப்படுகிறது.

- இலக்கை முக்கியமாக கொண்ட பகுதிகள் :
  தொடக்க, நடுநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் தலைவர்களின் தேவைகளை எதிர்கொள்வது, பள்ளித் தலைவர்களாக வரக்கூடிய மற்றும் வரவிரும்பும் ஆசிரியர்களின் தேவைகளும் கவனிக்கப்படுகின்றன.

- பிரச்சினை சார்ந்த பகுதிகள் : வெவ்வேறு பள்ளிகளின் சூழல் சார்ந்த பிரச்சினைகளை சமாளித்தல்.

மாநிலங்களில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள வளப்பொருள்களோடு தனியாள் ஆய்வு முடிவுகளையும் சேர்த்து வைத்திடல் வேண்டும். பாடத்திட்ட வடிவமைப்பும், வளப் பொருள்களும் மாநிலத்தில் இயங்கும் பள்ளிகளின் உண்மையான பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்காக மாநில வளக் குழுவோடு பல்வேறு பணிமனைகளை நடத்துதல் வேண்டும்.

# பள்ளித் தலைமைக்கான தேசிய மையம் – NIEPA

பள்ளிகளை தரமான கல்வி கொடுக்கக்கூடிய இடமாக உருமாற்றம் செய்வதற்கு, மாற்றம் மற்றும் புதுமை காணல் செயல்முறையில் ஈடுபடக்கூடிய திறன் வாய்ந்த, வலிமையான மற்றும் தகவல் அறிந்த தலைமை இருக்க வேண்டியது அவசியமாகிறது. இதற்கென NIEPA–பள்ளி தலைவர்களையும், நிர்வாகிகளையும், அவ்வப்போது ஒன்று சேர்த்து, அனுபவங்களை பகிர்ந்து கொள்ளச் செய்கிறது. எனினும், இன்னும் பெரிதாக செய்யப்பட வேண்டிய முயற்சிகள் நிறைய உள்ளன என்று கருதப்படுகிறது. இது தொடர்ந்து நடப்பதற்கான முதல்படியாகத்தான் NIEPA–இன் ஒரு அமைப்பாக பள்ளித் தலைமைக்கான தேசிய மையம் (NCSL) உருவாக்கப்பட்டுள்ளது.

பள்ளியில் மாற்றத்தையும், உருமாற்றத்தையும் கொண்டுவர பள்ளித் தலைமைகளுக்குச் சிறப்பான திறன் கட்டமைப்புப் பயிற்சிகளை வடிவமைக்க வேண்டும். இந்த நோக்கத்தை அடைவதற்கு தேசிய மையம் மாநிலங்களின் தேவைகளுக்கு ஏற்ப வடிவமைத்திருக்கும் பாடத்திட்டத்திற்கு இணங்க பள்ளித் தலைமைகளுக்கான திறன் கட்டமைப்பு பயிற்சிகளைதொடர்ந்து நடத்துதல் வேண்டும். பள்ளிகளுக்கிடையேயான வலைதள பிணைப்பின் மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள தேசிய மையம் ஊக்கப்படுத்த வேண்டும். நிறுவனங்களின் நிலையில் பள்ளிகளை நிர்வகித்தல், தலைமைப் பண்பில் ஆய்வுகளை மேற்கொள்ளுதல், அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் ஆகிய செயல்பாடுகளில் நிறுவனங்கள் ஈடுபட தேசிய மையம் ஊக்கப்படுத்த வேண்டும். பள்ளித் தலைமையின் திறன் மேம்பாட்டிற்கும், பள்ளி நிர்வாகத்திற்கும் தேவைப்படும் தகவல்களைத் தரக்கூடிய தகவல் மையமாகவும் தேசிய மையம் செயல்பட வேண்டும்.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் ஏற்கெனவே பணியில் உள்ள தலைமையாசிரியர்கள் மற்றும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தலைமை ஆசிரியர்கள், தொடக்கக் கல்வி முதல் மேல்நிலைக் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் மூத்த ஆசிரியர்கள் என அனைவரையும் ஒருங்கிணைத்துப் பள்ளித் தலைமைப் பண்பிற்கான பயிற்சிகளைத் தருதல் வேண்டும். இதன் முக்கிய சாரம்சம் என்னவெனில் கல்வி நிறுவனங்கள், கிராமங்கள், மாவட்டங்கள், மாநிலம் மற்றும் தேசியம் எனப்படும் எல்லா நிலைகளிலும் பள்ளிகள் மற்றும் பள்ளியின் முறைகளை மேம்படுத்தவும், வழிநடத்தவும் உகந்த நிலையில் தலைமைப் பண்பாளர்களை உருவாக்குவதேயாகும்.

பள்ளித் தலைமையின் தேசிய மையம்


**National Institute of Educational Planning and Administration**

17-B, Sri Aurobindo Marg, New Delhi-110016 (India)

EPABX Nos: 26565600, 26544800

Fax: 91-011-26853041, 26865180